புதுச்சேரி அரசு
போக்குவரத்துத் துறை
புதுச்சேரி

<u>செய்திக்குறிப்பு</u>

**<u>பள்ளிக்குக் குழந்தைகளை ஏற்றிச் செல்லும் ஆட்டோ உள்ளிட்ட போக்குவரத்து வாகன ஓட்டுநர்கள் கவனத்திற்கு</u>**

பள்ளி மாணவர்களின் பாதுகாப்பான பயணத்தினை உறுதி செய்யும் வகையில் கடந்த வாரம் முதல் அனைத்து பள்ளி மற்றும் கல்லூரி வாகனங்களுக்கான சிறப்பு சோதனை ஏற்பாடு மேட்டுப்பாளையம் போக்குவரத்துத் துறை கிளை அலுவலகத்தில் நடைபெற்றது வருகிறது. பள்ளி/கல்லூாரி வாகனங்களை இது வரை கொண்டுவராத கல்வி நிறுவனத்தினர் கால தாமதமின்றி தமது வாகனங்களை உடனடியாக சோதனைக்கு உட்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேற்படி பாதுகாப்பு நடவடிக்கையின் தொடர்ச்சியாக பள்ளிக்கு மாணவர்களை ஏற்றிச் செல்லும் ஆட்டோக்கள் உள்ளிட்ட பிற போக்குவரத்து வாகனங்களையும் சோதனை செய்யும் வகையில் சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஆட்டோக்கள் உள்ளிட்ட போக்குவரத்து வாகன உரிமையாளர்கள் தமது வாகனங்களை உரிய ஆவணங்களுடன் மேட்டுப்பாளையம் போக்குவரத்துத் துறை கிளை அலுவலகத்திற்கு 06.06.2013, 07.06.2013 மற்றும் 08.06.2013 ஆகிய நாட்களில் காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை சோதனைக்காக கொண்டு வரவேண்டும். வாகனங்கள் பள்ளி மாணவர்களை ஏற்றிச் செல்வதற்கான தகுதிகளுடன் உள்ளனவா என்பதை போக்குவரத்துத் துறை அதிகாரிகள் ஆய்வு செய்வார்கள். ஆய்வுக்குப் பின் தகுதியான வாகனங்களைப் பதிவு செய்வதுடன் அதற்குரிய அத்தாட்சி ஸ்டிக்கரும் ஒட்டப்படும்.

பாதுகாப்பு அத்தாட்சி ஸ்டிக்கர் பெற்ற அனைத்து வாகன ஓட்டுநர்களும் மாணவர்களின் பாதுகாப்பானப் பயணத்தை உறுதி செய்வதுடன் அவர்களைப் பாதுகாப்பாக ஏற்றி, இறக்கி விடுதல், சாலையைக் கடக்க உதவி செய்தல் உள்ளிட்ட பணிகளையும் செய்தல் வேண்டும். மாணவர்களை ஏற்றிச் செல்வதற்கு தகுதி உடையதாக போக்குவரத்துத் துறையால் பதிவு செய்து அத்தாட்சி ஸ்டிக்கர் பெற்ற வாகனங்களில் மட்டுமே பள்ளி மாணவர்களை பயணிக்க அனுமதிக்க வேண்டும் என்று அனைத்து பள்ளி நிர்வாகத்தினர் மற்றும் பெற்றோர்களையும் புதுச்சேரி போக்குவரத்துத் துறை கேட்டுக் கொள்கிறது.

GOVT OF PONDICHERRY * TRANSPORT DEPARTMENT *

S. [signature]
4.6.2013

ஆணையர்
போக்குவரத்துத் துறை
புதுச்சேரி